# ஆக்ஸ்போர்டு பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளி 10-ம் வகுப்பு தேர்வில் 97.4 சதவீதம் ஏ1 கிரேடு மற்றும் 100 சதவீதம் தேர்ச்சி




தினபூமி தென்காசி, மே 14:

தென்காசி மாவட்டம் குத்துக்கல்வலசை ஆக்ஸ்போர்டு பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளி மாணவ, மாணவிகள் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் *100* சதவீதம் தேர்ச்சி பெற்றனர். பள்ளி மாணவி பிரபாஸ்ரீ *97.4* சதவீதம் மதிப்பெண் பெற்று அனைத்து பாடங்களிலும் ஏ*1* கிரேடு பெற்று பள்ளியில் முதலிடம் பெற்றார். மேலும் தமிழில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளார். மேலும் அருணாச்சலம் என்ற மாணவன் *94.4* சதவீதம் மதிப்பெண் பெற்று அனைத்து பாடங்களிலும் ஏ*1* கிரேடு பெற்று பள்ளியில் இரண்டாமிடம் பெற்றுள்ளார். தமிழில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளார். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளை பள்ளி சட்ட ஆலோசகரும் உச்சநீதிமன்ற வழக்கறிஞருமான திருமலை, பள்ளி தாளாளர், அன்பரசி திருமலை, கேம்பிரிட்ஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் இராபர்ட் பெல்லார்மின், முதன்மை முதல்வர் ஆனி மெடில்டா, கேம்பிரிட்ஜ் இண்டர்நேஷனல் சீனியர் செகண்டரி பள்ளி இயக்குநர் ஜோசப் லியாண்டர், ஆக்ஸ்போர்டு பப்ளிக் பள்ளி சட்ட ஆலோசகரும் உச்சநீதிமன்ற வழக்கறிஞருமான . மிராக்ளின் பால் சுசி மற்றும் சீனியர் முதல்வர் ஜெய ஜோதி பிளாரன்ஸ், முதல்வர் சௌம்யா மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் உட்பட பலரும் பாராட்டினர்